சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி – 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)
முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி –6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2 சிறப்பிதழ் Special Issue

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 61. | அ. ஜாஸ்பின் ஷீலா | "கிணற்றில் விழுந்த தீண்டாமை" சிறுகதைத் தொகுப்பில் மனிதநேய மாண்புகள்" | 210-213 |
| 62. | செ. ஐஸ்வர்ய சுகிலா & ஜே. ஜெயரதி பொன்மலா் | கனிமொழியின் அகத்திணை கவிதையில் பெண்நிலை | 214-217 |
| 63. | ஜீ. பாண்டியலட்சுமி | சிலப்பதிகாரத்துள் காணலாகும் மாண்புடைமனிதா்கள் | 218-221 |
| 64. | அ. சஜன் | ஜி. நாகராஜனின் குறத்தி முடுக்கு நாவலில் பரத்தையர் | 222-224 |
| 65. | ப. சவிதா | அகமரபுகள் நோக்கில் சம்பந்தர் பாடல்களும் மனிதநேயமும் | 225-229 |
| 66. | திரு. ஆ.சந்திரசேகர் | "அட்டகுளத்திலும்ஒட்டிக்கொள்ளும் ஆம்பல்கவி" | 230-232 |
| 67. | எம்.மெஹ்முதா | 101 மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் மனித நேயம் | 233-237 |
| 68. | செ.மகேஸ்வரி | தமிழர் பண்பாட்டில் பசிப்பிணி போக்கும் மனிதநேய மாண்புகள் | 238-242 |
| 69. | தி.சுமதி & ப.சக்தி குமாரவேல் | வேதாத்திரிய நோக்கில் குடும்பச் சீர்திருத்தச் சிந்தனைகள் | 243-246 |
| 70. | சு.பாத்திமா | ப.க.பொன்னுசாமியின் 'படுகளத்தில்' மனிதநேயம் | 247-250 |
| 71. | மா.நடராசன் | இராமலிங்க வள்ளலாரின் மனிதநேயச் சிந்தனைகள் | 251-254 |
| 72. | கு.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 255-258 |
| 73. | ந.ஜெயவசந்தி | புறநானூற்றில் மனித நேய பண்புகள் | 259-262 |
| 74. | கோ.ஜெமிலா | புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் | 263-265 |
| 75. | செ.கிளாறா டெல்பின் ஜடா & நா.ரா.ஷிபஜா | கிறிஸ்தவ இலக்கியத்தில் இடம்பெறும் திருநங்கைகளின் மனிதநேயம் | 266-268 |
| 76. | நா.பன்னீர்செல்வம் | தமிழ் இலக்கியங்களில் காணும் மனிதநேய மாண்புகள் | 269-273 |
| 77. | தெ.சந்திரா | நீதி இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம் | 274-276 |
| 78. | தெ.சந்திரா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 277-280 |
| 79. | தமிழ்செல்வி.த | அஃறிணை உயிர்களிடத்தில் மனிதநேயம் | 281-283 |
| 80. | ச.குருஞானம்பிகா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 284-286 |
| 81. | சு.பிரியதர்ஷினி | கண்ணகியின் மனிதநேயம் | 287-290 |
| 82. | மு.சௌந்தரியா | கலித்தொகைத் தலைவியின் மனிதநேய மாண்புகள் | 291-294 |
| 83. | மோகனப்பிரியா.ச | கம்பராமாயணத்தில் இராமனின் மனிதநேயம் | 295-297 |
| 84. | த.திலகவதி | சூரியகாந்தன் நாவல்களில் மனிதநேயம் | 298-301 |
| 85. | ப.பத்மா & காசிபட்டா சத்யமூர்த்தி | பக்திஇலக்கியங்களில் மனிதநேய மாண்புகள் | 302-306 |
| 86. | வானதிபகீரதன் | ஈழத்துசிறுவர் பாடல்களில் உயிர்களிடத்தில் அன்பும் மனிதநேயமும் | 307-310 |
| 87. | கா.மகேசுவரி | புறநானூற்றில் மனிதநேய விழுமியங்கள் | 311-313 |
| 88. | மு.செந்தமிழ்ச்செல்வி | மூதின் முல்லைப் பாடல்களால் மானுடம் | 314-316 |
| 89. | K.சாந்தி முனைவர் & C.விஸ்வநாதன் | சித்தர் இலக்கியத்தில் மனித நேயப்பண்புகள் | 317-321 |
| 90. | த. கீதாஞ்சலி | கடையெழுவள்ளல்களின் மனிதநேயமாண்புகள் | 322-325 |
| 91. | தங்கராசா கோபிநாத் | சுப்பிரமணிய பாரதியாரது தேசபக்திபாடல்களில் மனிதநேயம் | 326-329 |
| 92. | சி.அமுதா | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தொழில்சார் மனிதநேயம் | 330-333 |
| 93. | இரா.இரமேஷ் | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 334-340 |
| 94. | கா. திருநாவுக்கரசு & செ.விஸ்வநாதன் | கம்பன் வடித்த இராவணன்பாத்திரமும் பேராண்மை அறமும் | 341-345 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner

# கடையெழுவள்ளல்களின் மனிதநேயமாண்புகள்

முனைவர் த. கீதாஞ்சலி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,(சுயநிதி)
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

சங்ககால மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுவனவாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. மனிதவாழ்க்கையில் ஏற்படுகின்ற அனுபவங்களையும் உண்மைகளையும் உணர்த்துவதே சிறந்த இலக்கியங்களாகும். இத்தகைய இலக்கியங்களே பழந்தமிழரின் பண்பாட்டுச்சிறப்புகளை உலகிற்குப் பறைசாற்றும் கருவூலங்களாகும். இவற்றில் பழந்தமிழர் பண்பாட்டில் முதன்மையானதாக விளங்குவது மனிதநேயமே. நேயம் என்ற சொல்லிற்கு "அன்பு, பக்தி, நன்மை, (ப.651) எனத்தமிழகராதிபொருள் தருகிறது." மனிதநேயம் என்பது பிறர்துயர் கண்டபோது உதவுதலும் பிறருக்காக வாழ்தலுமாகும். நாடு, இனம், மொழிவேறுபாடு கருதாது அனைவருக்கும் பொதுவாகவாழும் வாழ்வே மனிதநேயமாகும்" என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவ்வகையில் ஈதலும் இசைபடவாழ்தலும் பண்புடைய வாழ்விற்கு உரமூட்டின என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. இரப்பாருக்கு ஒன்று ஈவதே சிறந்த மனித நேயப் பண்பாகும். இத்தகையஈகைக்குணம் பிற உயிரையும் தம்முயிர்ப்போல் நேசிக்கும்போதுதான் வருகிறது.தனக்கெனவாழாமல் பிறருக்கெனவாழும் மனிதநேயமிக்கமனிதர்கள் இவ்வுலகத்தில் இருப்பதால்தான், இவ்வுலகம் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அத்தகையபண்பு இரப்பவருக்குநன்மைசெய்யும். இரந்தவருக்கும் நன்மைசெய்யும் இதனைஉணர்த்தும் ஒருபாடல்,

சுரப்புடையார் வைத்தகடையும் உதவா
துரப்புடைமன்னர்க்குதுப்பரவுதல்லால்
நிரப்பிடும்பைமிக்கார்க் குதவஒன்றீதல்
கரத்திடைப் பெய்தபெயல் (பழமொழி.373)

ஏழைக்குகொடாமல் மறைத்துவைத்தபொருள்கள் வைத்தவருக்குஉதவுவதில்லை. கடைசியாய் அரசருக்கே உதவும். ஆனால் வறுமையால் துன்பம் உடையவர்களுக்கு ஒருபொருளைக் கொடுத்தல் என்பது வெப்பத்தால் வாடிவருந்தும் சுரத்திடைப் பெய்தமழையால் குளிர்மை ஏற்பட்டு இன்புறுதல்போல இடும்பைமிக்கார்க்குஈதல் இன்பம் தரும். ஏழைகளுக்குக் கொடுத்தலே சிறந்தபண்பு எனப்பொருள் தருவதாக அமைந்துள்ளது. அவ்வகையில் பிறஉயிரைத் தன் உயிர்போல் கருதிபேணிய வள்ளல்களில் கடையெழுவள்ளல்கள் எனப் போற்றப்படும் எழுவரின் மனிதநேயச்சிறப்பை எடுத்தியம்புவதாக இக்கட்டுரைஅமைகிறது.

## பேகன்

பேகன் குறுநிலமன்னன். இவனது மனிதநேய மாண்பைவிளக்கும் விதமாக சிறுபாணாற்றுப் படைப்பாடலென்று காணப்படுகிறது. பருவமழை பொய்க்காது பெய்ததனால் வளமிக்கமலைப்பக்கத்துக் காட்டில் திரிந்தமயில் அகவியதைக்கேட்டு, குளிரால் நடுங்கியது என்றெண்ணி தனது போர்வையைக் கொடுத்தபேகன் பற்றி,

வானம் வாய்த்தவளமலைக் கவாஅன்
கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
(சிறுபாண்.84-85)

எனும்வரிகள் தெரிவிக்கின்றன. பேகனின் ஈகைச் சிறப்பைவெளிப்படுத்தும் விதமாக,



Scanned with CamScanner

கடாஅயானைக் கலிமான் பேகன்
எத்துணைஆயினும் ஈத்தல் நன்றுஎன
மறுமைநோக்கின்றோஅன்றே
பிறர் வறுமைநோக்கின்றுஅவன்
கைவண்மையே (புறம்.141)

என்றவரிகள் வெளிப்படுத்துகின்றன.

பாரி

பறம்புமலையைஆண்டகுறுநிலமன்னன் பாரி. நாட்டுவளம் காணச்சென்றபாரிவழியில் முல்லைக்கொடியொன்றுபற்றுவதற்குக் கொழுகொம்பு இன்றிவாடியதைக் கண்டான் அக்கொடிபடர்வதற்குத் தன் தேரைநிறுத்திவிட்டு நெடுந்தொலைவுநடந்தேவந்தான். இதனை,

....சுரும்புஉண
நறுவீஉறைக்கும் நாகநெடுவழி
சிறுவீமுல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
(சிறுபாண்.88-89)

என்றவரிகள் தெரிவிக்கின்றன.பாரியின் ஈகைத்திறன் பற்றிக் கபிலர் குறிப்பிடுகையில்,

பாரிபாரிஎன்றுபலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரிஒருவனும் அல்லன்
மாரியும் உண்டுஈண்டுஉலகுபுரப்பதுவே
(புறம்.107)

என்றவரிகளும் தன்னைநாடிவரும் இரவலருக்கும் புரவலருக்கும் அவர்கள் விரும்பினால் தங்கள் நாட்டைக் கேட்டாலும் கொடுக்கும் கொடைத்தன்மைபாரியிடம் இருந்தமையால் பறம்புநாட்டில் உள்ளமுந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கே கொடுத்துவிட்டான் என்பதை,

"முந்நூறு ஊர்த்ததண்பறம்புநன்னொடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்"
(புறம்.110)

என்றவரிகளும் பாரியின் ஈகைப்பண்பைச் சிறப்பிக்கிறார்.

மலையமான் திருமுடிக்காரி

ஒளிமிக்கஅச்சம்தரும் நீண்டவேலினை உடையவன்காரி. கபிலர் மலையமான் திருமுடிக் காரியின் பாடும் பொழுதுஅவனைப் பாடியபுலவர்கள் பரிசில் பெறாமல் வெறுங்கையுடன் செல்லமாட்டார்கள் என்பதைஉணர்த்தும்விதமாக,

"வறிதுபெயர்குநர் அல்லர்
............ .................... .................
பீடுகெழுமலையற் பாடியோரே"(புறம்.124)

என்றவரிகள் அமைந்துள்ளன.உலகமேவியக்கும் வகையில் போரில் புகழ்மிக்கதன் குதிரைகளையும், பெரும் பொருளையும் இரவலர்க்குக் கொடுத்தான். இதனால் அவன்,

"ஈர நன்மொழி இரவலர்க்குஈந்த
............ .................... .................
கழல்த்தொடித் தடக்கைக் காரி"
(சிறுபாணா.93-95)

என்றுசிறப்பிக்கப்படுகிறான்.இரந்துவருவோருக்கு இல்லைஎன்று கூறாதமனிதநேயமாண்பு இதில் வெளிப்படுகிறது.

ஆய்

பொதியமலைச்சாரலில் ஆய்குடியைத் தலைநகராகக்கொண்டுஆட்சிசெய்தவன் ஆய்.இவனின் ஈகைச்சிறப்பைப் பற்றிஉறையூர் முடமோசியர் பாடும்போது,

"நின் நாட்டு
இளம்பியதுஒரு சூல் பத்துஈனும்மோ?
நின்னும் நின் மலையும் பாடிவருநர்க்கு
இன்முகம் தரவாதுஉவந்துநீஅறித்த
அண்ணல் யானைஎண்ணின்" (புறம்.130)

என்றுபுகழ்கிறார்.

அதியமான்

சாவா மூவாஅமிழ்தத்தையும் பிறருக்கு கொடுத்துமகிழ்ந்தஅதியமானின் மனிதநேயத்தை வெளிக்காட்டும் விதமாக ஔவையார்,



Scanned with CamScanner

பெருமலைவிடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலைநெல்லித் தீங்கனிகுறியாது
ஆதல் நின்னகத்தடக்கிச்
சாதனீங்களமக்கீத்தனையே (புறம்.91)

என்றபாடலின் மூலம்நெடுநாள் வாழவைக்கும் நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்த மனிதநேய மேன்மையைப் பதிவுசெய்துள்ளார். மற்றுமொருபாடலில் பகுத்துண்டுபல்லுயிர் ஓம்பும் பண்பாளன் அதியமான் என்பதை,

சிறியகட் பெறினே,எமக்குஈயும்
மன்னேபெரியகட் பெறினே
யாம்பாடதான் மகிழ்ந்துண்ணும் மன்னே
(புறம்.235)

எனப் பாராட்டியுள்ளார். பிறருக்குப் பகிர்ந்தளித்துவாழத் தயங்கும் மனிதர்கள் மத்தியில் அதியமான்உணவின் அளவுஎப்படி இருப்பினும் அதைப் பகுத்துண்ணும் பண்பாளனாகவாழ்ந்துவந்தான் என்பது புலனாகிறது. ஒன்றுமே இல்லாதவறியநிலையில் நம்மிடம் ஒருவன் இரக்கும் போதுஎப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைகீழ்க்கண்டபாடல் உணர்த்துகிறது.

உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன் (புறம்.95)

பொருள் இருக்கும்போதும் இல்லாதபோதும் மனிதநேயத்துடன் வாழவேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

### நள்ளி

வளம் செறிந்தகண்டீரநாட்டைச் சேர்ந்தவன் நள்ளி. உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசுவதும் உள்ளத்தில் கருணை இல்லாமல் பிறருக்குகொடுத்தலும் பயன்தராது என்ற கொள்கையை உடையவன். தன்னிடம் வந்தவர்கள் மீண்டும் வறுமையில் வாடாதவாறும் வேறொருவரிடம் சென்று இரவாதவாறும் நிரம்பக் கொடுக்கும் இயல்புஉடையவன் நள்ளி. இதனை,

முட்டாதுகொடுத்தமுனைவிளங்குதடக்கை
................ ................ ................
நளிமலைநாடன் நள்ளி (சிறுபாணா.105-107)

என்றுபாராட்டப்படுகிறான்.

### ஓரி

சிறிய மலைகளை உடைய கொல்லி மலைக்குத் தலைவன் ஓரி. இவன் புன்னைமரங்களையும் குன்றுகளையும் உடைய நாடுகளைக் கூத்தருக்குக் கொடுத்ததை,

நறும்போதுகஞலியநாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறைநல்நாடுகோடியர்க்குஈந்த
................ ................ ................
ஓரிக் குதிரைஓரி... (சிறுபாணா.107-111)

என்றவரிகள் ஓரியின் கொடைத் தன்மையினை தெரிவிக்கின்றன.

### குமணன்

கடையெழு வள்ளல்களுக்கு இணையாகப் பேசப்படுபவன் குமணன். அரசுக்கட்டிலை இழந்தகுமணன் காட்டில் தஞ்சம் அடைகிறான். அப்பொழுது பெருந்தலைச் சாத்தன் குமணனைநாடிப் பரிசில் வேண்டுகிறான். குமணனிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லையாயினும் தனதுதலையைக் கொய்துபோய் தன் தம்பியிடம் கொடுத்துப் பரிசில் பெறும்படி கூறுகிறான், இதனை,

நாடிழந் ததனினும் நனிஇன்னாதென
வாள் தந்தனேதலையெனக் கீயத்
தன்னி சிறந்ததுபிறிதொன்றியமையின்
(புறம்.165)

என்றுபெருந்தலைச் சாத்தன் பாடல் விளக்குகிறது. பெருமைபெற்ற இரவலனாகியபரிசிலன் வாடிச்



Scanned with CamScanner

செல்வதுநாட்டை இழந்ததைக்காட்டிலும் பெருந்துன்பமாக இருக்கிறதுஎனக் குமணன் வருந்துகின்றான். பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகபாவிக்கும் மனிதநேயப் பண்பு இப்பாடலில் வெளிப்படுகிறது.

செல்வத்தின் பயன் ஈதலேஎன்றகோட்பாட்டின்படி இருப்போன் இல்லாதவனுக்குப் பயனை எதிர்பார்க்காது கொடுப்பதே தலைச்சிறந்த மனிதநேய மாண்புயாகும். இம்மாண்புக்கு முன்மாதிரியாக காலத்தால் அழியாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக கடையெழுவள்ளல்களும் திகழ்கிறார்கள். மனிதன் சகமனிதனிடம் காட்டும் மனிதநேயத்தைவிடமனிதரல்லாத அ∴றிணை உயிர்களின் துன்பத்தையும் தன் துன்பமாகக் கருதிவாழ்ந்தபாரிமற்றும் பேகனின் ஆன்மநேயப் பண்பு அதனைவிடச் சிறப்பிற்குரியதாக அமைகின்றது. மனிதநேயம் அருகிவிட்ட இன்றையகாலக்கட்டத்தில் ஈதலிற் சிறந்தவள்ளல்களின் வாழ்வை எடுத்துக்காட்டுவது காலத்தின் தேவையாகும். மனிதநேயமே இறப்பில்லாவாழ்விற்கும் வழி என்றகருத்தும் இக்கட்டுரையின் வழி முன்வைக்கப்படுகிறது.

❖❖❖



Scanned with CamScanner